# தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள்

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ந. ஜெயசுதா

முனைவர் ம. பிரகாஷ்

தமிழ்த்துறை (சுயநிதி)
என்.ஜி.எம். கல்லூரி
பொள்ளாச்சி.

# தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள்

## (பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ந. ஜெயசுதா
முனைவர் ம. பிரகாஷ்

**தமிழ்த்துறை**
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி
(தன்னாட்சி, தேசிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக்
குழுவின் 'ஏ' தகுதி ஐ.எஸ்.ஓ.
9001:2015 தரச்சான்றிதழ் பெற்றது)
பொள்ளாச்சி - 642 001

# தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள்

## (பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)

பதிப்புக்குழு
முனைவர் த.பரமேசுவரி(துறைத்தலைவர்),
முனைவர் த. கீதாஞ்சலி,
முனைவர் இரா.விஷ்ணுப்பிரியா,
முனைவர் ம. சித்திரகலா, முனைவர் ந. பிரகாஷ்,
முனைவர் மு. சுகந்தி, முனைவர் இரா. ஜெயந்தி,
பேரா. ர.சூர்யா, பேரா. அ. மகபுபூ.

முதற்பதிப்பு : டிசம்பர், 2018

வெளியீடு : டுடே பதிப்பகம்
192, பெல்ஸ் சாலை,
சேப்பாக்கம், சென்னை - 600 005.

கணினி : டுடே கிராபிக்ஸ்

அச்சாக்கம் : டுடே பிரிண்டர்ஸ்
14/192, பெல்ஸ் ரோடு,
எஸ்.ஆர். காம்ப்ளக்ஸ், சென்னை-05.
அலைபேசி:98400 83738 / 044-2855 3797

பக்கங்கள் : xxiii + 483 = 506

விலை : ரூ.420/-

ISBN : 978-93-87882-47-8

49. தமிழ்ச் சமூக வரலாறு: முருகனின் பரிமாணங்கள்
முனைவர் ம. பிரகாஷ் 320

50. பட்டினத்தார் பாடல்களில் இறையுணர்வு
ப. பிரதாப் 326

51. திருக்காளத்திப்புராணம் காட்டும் கண்ணப்பரின் இறைநெறி
ப. பிரியா 333

52. பெரியபுராணமும் : விவிலியம் காட்டும் இறைநெறிகள்
பா. பூங்காவனம் 338

53. விவிலியம் காட்டும் இறைநெறி
சு. பெர்சியா ஜீவபாய் 343

54. டி. செல்வராஜ் நாவல்களில் இறைநெறி
முனைவர் பி. மஞ்சுளா 348

55. சமயங்கள் வளர்த்த தமிழ்
அ. மகபூபு 358

56. தமிழ் இலக்கியங்களில் இறைநெறி
முனைவர் ச. மதுரா 364

57. சங்ககால நாடறி நன்மணமும் தாலியும்
முனைவர் த. மலையரசி 369

58. திருமுருகாற்றுப்படையும் இறைநெறியும்
முனைவர் மு.தேவராஜ் 374

59. திரு.வி.க.வின் பொதுமை நோக்கிய சைவம்
பேராசிரியர் ப. மகாலிங்கம் 383

60. இலக்கியத்தில் ஆழ்வார்களின் இறைநெறி
முனைவர் பே. மகேஸ்வரி 389

61. இராமலிங்க அடிகளாரின் திருவருட்பா உணர்த்தும் இறைநெறி
பேராசிரியர் முனைவர் வே. மாணிக்கம்மாள் 396

62. திருவள்ளுவரின் கடவுள் கொள்கை
முனைவர் முகில்ல இராசபாண்டியன் 402

63. சிலப்பதிகாரம் கூறும் இறைவழிபாட்டு மரபுகள்
அ. முத்துகிருஷ்ணன் 407

64. கம்பனில் வைணவ நெறி
முனைவர் சி. முத்துமாலை 411

65. தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள்
க. முருகேசன் 419

# 50. பட்டினத்தார் பாடல்களில் இறையுணர்வு

ப. பிரதாப்
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
என்.ஜி.எம் கல்லூரி,
பொள்ளாச்சி- 642001.

தெய்வத்தமிழ்த் திருநாட்டில் தோன்றித் துறவறம் நின்ற பெரியாருட் சிறந்தவர் இருவர். ஒருவர் பட்டினத்துப் பிள்ளையார், மற்றொருவர் அவருடைய சீடர் பத்திரகிரியார். பட்டினத்தாரின் துறவு நிலை குறித்து, **'பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப்பிள்ளையைப் போல் ஆருந்துறக்கை யரிதரிது'** என்றும், பத்திரகிரியாரை, **'ஒட்டுடன் பற்றின்றி உலகைத் துறந்த செல்வப் பட்டினத்தார் பத்திரகிரி பண்புணர்வ தெந்நாளோ'** எனவும் இவ்விரு பெருந்துறவிகள் பற்றித் தாயுமானவர் குறிப்பிடுவதன் மூலம் இவர்களின் பெருமையை உணரவியலுகிறது. இங்ஙனம், பட்டினத்தார் பாடல்களில் இறை குறித்த செய்திகள் குறித்து இக்கட்டுரையில் சிந்திப்போம்.

## உடலின் தன்மை

மனிதனைப் படைத்து, காத்து, மறைத்து அருளும் எல்லாம் வல்ல பரம்பொருளே அவரவர் வினைக்கேற்ப வாழ்வை முடித்தும் வைக்கிறான். அதாவது உடலை அழித்து அல்லது மாற்றி அவரவர் பரிபக்குவத்திற்கேற்ப நிலையைத் தந்தருள்கிறார். அவனின்றி ஓர் அணுவும் அசையாது அணுவுக்கு அணுவாக ஒளிர்பவன் மனித உடலில் இல்லாமல் போவானா? எங்கும் உள்ள இறைவன் நம் உடலினுள்ளும் இருக்கிறான் உயிராக! இதுவே ஆதிகாலந் தொட்டு நம் ஞானிகள் எல்லோரும் உரைத்த உண்மை. இதையே **'அகம் பிரம்மாஸ்மி'** என்பார்கள். பரமாத்மா சிறு ஜோதியாகத் தன்னைக் குறுக்கிக் கொண்டு ஜீவாத்மாவாக நம்முள் விளங்குகிறது. நம் உள்மனம் கடந்த நிலையில் இறைவன்

இருப்பதால் தான் ஆன்றோர் ஆன்றோர் கடவுள் என்றனர். இறைவனை உள்நோக்கிக் காணாமல் கடல் மலைகளில் எல்லாம் தேடி அலைந்தேன் என்பதை,

**உடலுக்குள் நீ நின்று உலாவினதைக் காணாமல்**
**கடல் மலை தோறும் திரிந்து கால் அலுத்தேன் பூரணமே**
**(பூரணமாலை.459)**

**என்னை அறியாமல் எனக்குள்ளே நீ இருக்க**
**உன்னை அறியாமல் உடல் இழந்தேன் பூரணமே**
**(பூரணமாலை.486)**

என்ற பாடலடிகளில் சுட்டுகிறார் பட்டினத்தார். இக்கருத்தினைத் திருமூலரும், **'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்'** என்று குறிப்பிடுவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. மேலும், உடல் பல்வேறு பழிகளைச் சுமந்து கொண்டுள்ளது என்பதை,

**அங்கோ டிங்கோ டலமருங் கள்வர்**
**ஐவர் கலகமிட் டலைக்குங் கானகம்**
**சலமலப் பேழை யிருவினைப் பெட்டகம்**
**வாத பித் தங் கோழைகுடி புகுஞ் சீறூர்**
**ஊத்தைப் புன்றோ லுதரக் கட்டளை**
**நாற்றப் பாண்டம் நான்முழத் தொன்பது**
**மீற்றப் றுண்டம் பேய்ச் சுரைத் தோட்டம்**
**அடலைப் பெரிய சுடலைத் திடருள்**
**ஆசைக் கயிற்றிலாடும் பம்பரம்**
**ஓயா நோய்க்கிட மோடு மரக்கலம்**
**மாயா விகாரம் மரணப் பஞ்சரம்**
**சோற்றுத் துருத்தி தூற்றும் பத்தம்**
**காற்றிற் பறிக்குங் கானப் பட்டம்**
**விதி வழித் தருமன் வெட்டுங் கட்டை**
**சதுர் முகப் பாணன் தைக்குஞ் சட்டை**

(கோயில் திருவகவல்-2:6-20)

என்ற பாடல் அடிகளில் 'அங்கும் இங்குமாக ஓடிச் சுழலுகின்ற திருடர்களாகிய ஐவர்கள் கலகஞ்செய்து வருந்துங்காடு சலமும் மலரும் நிரம்பிய பெட்டி, நல்வினை தீவினை தங்கும் பொய்வீடு, வாதம் பித்தம் சிலேத்துமம் என்னும் மூன்றும் வாழும் சிறிய ஊர், அழுக்கோடு கூடிய புல்லிய தோலும் இருத்தமுஞ் சேர்ந்த கருவி, தீ நாற்றம் வீசும் பானை நான்கு முழ நீளத்தில் ஒன்பது துவாரமுள்ள ஒரு மரத்துண்டு பேய்ச்சுரை படர்ந்த தோட்டம் சாம்பல் மிகுந்த பசந்த சுடுகாட்டு மேடு, ஆசையாகிய

கயிற்றால் சுழலும் பம்பரம், நீங்காத நோய்களுக்கு இருக்கை, ஓடுகின்ற கப்பல், மாயையாகிய அவலட்சணம் மரணக்கூடு, சோறு அடை துருத்தி, காற்றில் தூற்றப்படும் பதர், காற்றில் பறக்கும், கர்மத்துக்குத் தக்கபடி யமன் தரிக்கும் கட்டை' என்று பலவாறாக யாக்கை நிலையில்லாதது என்பதையும் பாடியுள்ளார்.

## துறவு நிலை

தாயுமான அடிகள் பாராட்டியது போலத் துறவு நெறி பற்றிப் பல பாடல்களை பட்டினத்தார் பாடியுள்ளார். ஒரு மனிதனுக்கு அடிப்படைத் தேவையாக உள்ளவை உணவு, உடை, உறையுள் என்பனவாகும். இன்றுள்ள பலரும் இம்மூன்றிற்காகவும், இம்மூன்றைச் சார்ந்து கிடைக்கும் இன்பங்களுக்காகவுமே மிகவும் அல்லலுறுகின்றனர். உண்ணும் உணவும், உடுத்தும் உடையும், வசிக்கும் வீடும் தமக்குச் சொந்தமாக வேண்டும் என்னும் விருப்பாலும் அவை இன்றிருக்கும் காலப் போக்கிற்கேற்ப ஆடம்பரமான நிலையில் அமைய வேண்டும் என்னும் ஆசையாலும் தான் மக்கள் துன்புறுகின்றனர். தேவைக்கு ஏற்ற சாதாரண உணவும், எளிய உடையும், வசிக்கும் அளவில் சிறிய இடமும் அமைந்தால் போதும் எனும் மனநிலை இன்று பலரிடத்தும் இல்லாமையே பல்வகைத் துன்பங்களுக்கும் காரணமாகின்றது. இதனால்தான் பட்டினத்தார், 'வாழ்க்கையில் தேவையினைச் சுருக்கியும், அத்தேவைகளை எளிமைப்படுத்தியும் வாழ்தல் நல்லது' என்று பாடியுள்ளார். அங்ஙனம் துறவு நெறியில் வாழும் மனிதனுக்கு ஈடு உலகில் ஒருவருமில்லை என்றும் உணர்த்துகிறார். அப்பாடலாவது,

**வீடு நமக்கு திருவாலங் காடு விமலர்தந்த**
**ஓடு நமக்குண்டு வற்றாத பாத்திர மோங்கு செல்வ**
**நாடு நமக்குண்டு கேட்டதெல்லாந்தர நன்னெஞ்சமே**
**ஈடு நமக்குச் சொலவோ யொரு வருமிங்கில்லையே**

**(பொது.90)**

என்பதாகும். மேலும், கிடைப்பதைக் கொண்டு சிவபெருமானது நாமத்தைச் சொல்லிக் கொண்டு இருத்தல் வேண்டும். இப்படிப்பட்ட துறவு நிலையை,

**உடைக்கோ வணமுண் டுறங்கப் புறந்திண்ணை யுண்டுணவிங்**
**கடைகா யிலையுண் டருந்தத்தண் ணீருண் டருந்துணைக்கே**
**விடையேறு மீசர் திருநாம முண்டிந்த மேதினியில்**
**வடகோ டுயர்ந்தென்ன, தென்கோடு சாய்ந்தென்ன வான்பிறைக்கே (பொது.89)**

என்ற பாடலில் எடுத்துரைக்கிறார். 'இந்த உலகத்தில் உடுப்பதற்குக் கௌபீனம் உண்டு, தூங்குவதற்குத் திண்ணைப்புறம் உண்டு, ஆகாரத்திற்குக் கிடைக்குங் காயும் இலையும் உண்டு, நீங்காத துணைக்கு இடப வாகனத்தின் மேல் ஆரோகணித்தருளும் சிவபெருமானுடைய திருநாமம் உண்டு, ஆனபடியால், ஆகாயத்திலுள்ள சந்திரனுக்கு வடமுனை உயர்ந்தாலென்ன, தென்முனை தாழ்ந்தாலென்ன?' என்கிறார் பட்டினத்தார். துறவிக்கு உலக இயக்கங்களிலும், நடப்பியலிலும், எந்தவிதமான தொடர்பும் இல்லை என்பதை இப்பாடல் எடுத்துரைக்கிறது.

## நிலையாமை

நிலையில்லாதவற்றை நிலையானவை என்று எண்ணுவதும் பொய்யானவற்றை மெய்யானவை என்பதும் மாயை. இம்மயக்கம், ஆன்மா தன் உண்மை நிலையை அறிய விடாமல் தடுக்கிறது. பொருள்களின் புறத்தோற்றங்களையும் இயல்புகளையும் உண்மை எனக் கொள்ளாமல் அவற்றைக் கடந்து சென்று நிலைத்த உண்மையைக் காண்பதே அறிவு என்பார் வள்ளுவர். இவ்வுலகில் நாட்கள் என்றும் வாரங்கள் என்றும், மாதங்கள் என்றும், ஆண்டுகள் என்றும் இருப்பவை வெறும் காலக்கணக்கே தவிர உண்மையில்லை. ஒவ்வொரு நாள் கழியும் போதும் நேற்றைய நாள் கழிந்தது என்று கருதாமல் நம் வாழ்நாளில் ஒரு நாள் கழிந்தது என்று கருதும் மனநிலை வேண்டுமென்பார் திருவள்ளுவர்.

**நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்**
**வாளது உணர்வார்ப் பெறின் (குறள் -334)**

என்பது அக்குறள் இந்நிலையாமையை உணராதவர்களை,

**நில்லாதன வற்றை நிலையின என்றுணரும்**
**புல்லறி வாண்மை கடை (குறள் -331)**

என்று சாடுகிறார். பட்டினத்தார்,

முடிசார்ந்த மன்னரு மற்றுமுள்ளோரு முடிவிலொரு
பிடி சாம்பராய் வெந்து மண்ணாவதுங் கண்டு
பின்னுமிந்தப்
பிடி சார்ந்த வாழ்வை நினைப்பதல்லாற்
பொன்னிணம்பலவர்
அடி சார்ந்து நாமுய்ய வேண்டுமென்றே யறிவாரிலையே
(திருத்தில்லை.54)

என்ற பாடலில், எத்தகைய புகழ்மிக்க மன்னராய் இருந்த போதிலும் எத்தகு சிறப்பு பொருந்திய வாழ்வு வாழ்ந்த போதிலும் மன்னரும் மற்றவரும் இறந்தபின்பு எரிந்து சாம்பலாகி விடுவதுண்டு என்கிறார். மேலும், பட்டினத்தடிகள்,

வாதுற்ற திண்புய ரண்ணா மலையர் மலர்ப்பதத்தைப்
போதுற்றெப் போதும் புகலுநெஞ் சேயிந்தப் பூதலத்தில்
தீதுற்ற செல்வமென் தேடிப் புதைத்த திரவியமென்
காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே
(பொது.98)

என்ற அடிகளில், தீமை நிறைந்த செல்வமிருந்தும் என்ன பயன்? வருந்தித் தேடிப் புதைத்து வைத்துள்ள செல்வமிருந்தும் என்ன பயன்? மரணத்திற்குப்பின் வழித்துணையாக காதறுந்த ஊசியும் உடன் வாராது. ஆகையால், வாழ்வு நிலையற்றது என்ற தத்துவத்தை உணர்ந்து வாழ வேண்டும் என்கிறார்.

## தத்துவங்கள்

பட்டினத்தார் அன்றாட வாழ்வில் பின்பற்ற வேண்டிய வாழ்வியல் தத்துவங்கள் பலவற்றைத் தொகுத்துத் தந்துள்ளார். 'ஓயாமல் பொய் சொல்பவர், நல்லோரை நிந்திப்பவர் தாயரைத் திட்டுகின்றவர், சதி செய்வார், சாத்திரங்களை ஆராயார், பிறருக்கு உதவிசெய்யாதவர், நாடி வந்தவருக்கு ஒன்று ஈயாதவர்' போன்றோர் பூமியில் இருந்தால் என்ன இறந்தால் என்ன? என்பன போன்ற அவருடைய சிந்தனைகள் வாழ்க்கைக்கு ஆதாரமானவை. இறை வழிபாட்டினால் மனம் ஒன்றாமல் வெறுமனே சடங்காகச் செய்வதினால் பயன் ஏதுமில்லை என்பது பட்டினத்தாரின் கருத்து. முழுமுதற்பொருளான பேராற்றலை நினைத்து வழிபடாமல் பூசை செய்வது பொருளற்றது தான்!

கை ஒன்று செய்ய விழி ஒன்று நாட கருத்தொன் றெண்ணப்
பொய் ஒன்று வஞ்சக நாஒன்று பேசப் புலால் கமழும்

மெய் ஒன்று சாரச் செவி ஒன்று கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசை எவ்வாறு கொள்வாய் வினை
தீர்த்தவனே (பொது.92)

மனம், மொழி, மெய்யினால் நினைந்து வழிபட வேண்டிய பரம்பொருளை மன ஓர்மையற்றுத் துதிப்பது ஏற்புடையது அல்ல என்கிறார் பட்டினத்தார். வாசி என்னும் மூச்சுக் காற்றினை அடக்கிச் சித்தர் நெறியில் வாழ்ந்த பட்டினத்தார் யோகத்தினையும் போற்றுகின்றார்.

அட்டாங்க யோகமும் ஆதாரம் ஆறு அவத்தை ஐந்தும்
விட்டு ஏறிப் போன வெளி தனிலேவியப்பு ஒன்று கண்டேன்
வட்டு ஆகிச் செம்மதிப் பால் ஊறல் உண்டு மகிழ்ந்திருக்க
எட்டாத பேரின்பம் என்னை விழுங்கி இருக்கின்றதே
(பொது.113)

எட்டு யோகங்களும் ஆறு அவத்தைகளும் என ஞானவழியில் இறைவனின் ஆற்றலை அறிய முயலுவது சித்தர் மரபு சார்ந்ததாகும். யோகத்தின் மூலம் கிடைப்பது பேரின்பம் என மனவெளிதனில் பட்டினத்தாரின் மனம் சிறகடிக்கின்றது. இவருடைய பாடல்களில் சில இடங்களில் திருவாசக மணமும் நிறைந்து காணப்படுகிறது. உதாரணமாக,

புல்லாகிப் பூடாய்ப் புலர்ந்தநாள் போதாதோ?
கல்லாய் மரமாய்க் கழிந்தநாள் போதாதோ?
(முதல்வன் முறையீடு.217)

என்ற அடிகள் மணிவாசகரின்,

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி (சிவபுராணம்.26-27)

என்ற திருவாசக அடிகளை நினைவூட்டுகின்றன. மேலும், தமக்கு வாய்த்த பிறவிகள் எத்தனையோ என்று முற்பிறவிகள் குறித்தும், வினைகளுக்கேற்ப வரும் பிறவிகளையும் எண்ணி,

அன்னை யெத்தனை யெத்தனை யன்னையோ
அப்ப னெத்தனை யெத்தனை யப்பனோ
பின்னை யெத்தனை யெத்தனை பெண்டிரோ
பிள்ளை யெத்தனை யெத்தனை பிள்ளையோ
முன்னை யெத்தனை யெத்தனை சென்மமோ
மூட னாயடி யேனு மறிந்திலேன்
இன்ன மெத்தனை யெத்தனை சென்மமோ
என்செய் வேன் கச்சி யேகம்ப நாதனே
(திருவேகம்ப விருத்தம்.47)

என்று இனி எடுக்கப் போகும் பிறவிகள் எத்தனையோ எனவும் வருந்துகிறார் பட்டினத்தடிகள். இவ்வாறாக பட்டினத்தடிகளின் கருத்துக்கள் காலம் கடந்து நிற்கும் பாங்கு பெற்றுத் திகழ்கின்றன.

**நிறைவாக!**

பட்டினத்தார் பாடல்களில் அமைந்துள்ள கருத்துக்களைப் பல்வேறு தலைப்புகளில் நாம் ஆராயலாம். எனினும், காலமும் இடமும் கருதி சுருங்கிய அளவே இங்கு ஆராயப்பட்டுள்ளது. இறையுணர்வு பெற்ற இவரது பாடல்கள் ஒவ்வொன்றும் வாழ்வின் பல பரிமாணங்களை உணர்த்த வல்லன. தமிழன்பர்கள் இப்பாடல்களைப் படித்து அதன்வழி வாழ்ந்து இன்புறுவார்களாக!..

**பார்வை நூல்கள்**

1. பட்டினத்தார் பாடல்கள் விருத்தியுரை (திரு.வி.க) - சாரதா பதிப்பகம், சென்னை.600014.
2. தாயுமானவர் பாடல்கள் மூலமும் உரையும் (வடிவேலு முதலியார்) - சாரதா பதிப்பகம், சென்னை,600014.
3. திருமந்திரம் மூலமும் உ.ரையும் (மாணிக்கவாசகம்) - உமா பதிப்பகம், சென்னை,600018.
4. திருவாசகம் மூலமும் உரையும் (சாது.சுஸ்ரீனிவாஸ்) - ஸ்ரீ இந்து பப்ளிகேஷன், சென்னை,600017.
5. திருக்குறள் பரிமேலழகர் உரை - பூம்புகார் பதிப்பகம், சென்னை,600108.
6. பன்முகப் பார்வையில் சமய இலக்கியங்கள் (ஆய்வுக்கோவை) - தமிழ்த்துறை, இலயோலா கல்லூரி, சென்னை,600034.

XXX